**<u>முதன்மை தொழிலாளர் நீதிமன்றம், கோயமுத்தூர்</u>**

முன்னிலை: திருமதி.A.P. லதா, பி.எஸ்.ஸி., பி.எல்.,
முதன்மை தலைமை தாங்கும் அதிகாரி,
முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

செவ்வாய் கிழமை, 17 ம் நாள், மார்ச் மாதம் 2026 ம் வருடம்.

<u>தொழிற்தாவா எண்.54/2025</u>

(CNR No.TNCB04-000169-2024)

நேதாஜி போக்குவரத்து தொழிலாளர்கள்
பாதுகாப்பு தொழிற்சங்கத்திற்காக அதன்
மாநில பொது செயாளர்
M.அன்புராஜ். ..... மனுதாரர்

~ எதிராக ~

1. நிர்வாகம்,

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,

ஒண்டிப்புதூர் - I கிளை ஒண்டிப்புதூர்,

கோவை.

2. நிர்வாகம்,

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,

(கோவை கோட்டம்)

மேட்டுப்பாளையம் சாலை,

கோவை. ... எதிர்மனுதாரர்கள்

இந்த வழக்கு கடந்த 16.03.2026ம் தேதியன்று என் முன் இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.M.சீனிவாசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திருமதி.K.கன்னிகா சங்கரேஸ்வரி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் மற்றும் வழக்கு கோப்புக்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் எனது பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும் :-

தீர்வம்

மனுதாரர் தொழிற்சங்கம் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு எதிராக தொழிற் தகராறு சட்டம் 1947 பிரிவு 2(K)ன் கீழ் கோவை தொழிலாளர் அலுவலர் முன்பாக ஒரு மனு தாக்கல் செய்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கோவை கோட்டம்) கோயம்புத்தூர் என்ற நிர்வாகத்தில் பணிபுரியும் திரு.E.கார்த்திகேயன், ஓட்டுநருக்கு (பணி எண்.சி22114) மே 2020ம் மாதம் விடுப்பு கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட 2 நாட்கள் ஈட்டிய விடுப்பினை, சிறப்பு விடுப்பாக கருதி, பிடித்தம் செய்த 2 நாட்கள் ஈட்டிய விடுப்பினை, திரும்ப அவரின் விடுப்பு கணக்கில் சேர்த்து வழங்க வேண்டுமாறும், கோரியிருந்த மனுவானது தொழிற்தாவா விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது சமரசம் ஏற்படவில்லை என்பதால் 04.01.2022ம் தேதியில் சமரச அதிகாரி தனது சமரச முறிவு அறிக்கையை மாநில அரசுக்கு சமர்பித்தார். அதனை ஏற்றுக் கொண்ட தமிழக அரசு கீழ்கண்ட எழுவினாவிற்கு பதில் அளிக்க இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

G.O. (D) No.350 Labour and Employment (D-1)
Department, dated 13.06.2024.

<u>எழுவினா</u>

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கோவை கோட்டம்) கோயம்புத்தூர் என்ற நிர்வாகத்தில் பணிபுரியும் திரு.E.கார்த்திகேயன், ஓட்டுநருக்கு (பணி எண்.சி22114) மே 2020 ம் மாதம் விடுப்பு கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட 2 நாட்கள் ஈட்டிய விடுப்பினை, சிறப்பு விடுப்பாக கருதி, பிடித்தம் செய்த 2 நாட்கள் ஈட்டிய விடுப்பினை திரும்ப அவரின் விடுப்பு கணக்கில் சேர்த்து வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்".

2. மனுவின் சுருக்கம் :

மனுதாரர் சங்கம் தொழிற்சங்க சட்டப்படி பதிவு செய்யப்பட்டதும், எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு கட்சி சார்பற்ற அமைப்பாகும். மனுதாரர் சங்கம் தொழிலாளர் நலனையும், நிறுவன நலனையும் பாதுகாக்க உறுதிகொண்டு செயல்பட்டு வரும் ஒரு தொழிற்சங்க அமைப்பாகும். எதிர்மனுதாரர் நிறுவனம் தமிழக அரசால் ஏற்று நடத்தப்பட்டு வரும் ஒரு போக்குவரத்து நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் அரசு சார்ந்த நிறுவனமாக இருந்த போதிலும், தொழிலாளர்களின் நலனை பாதுகாக்க தவறியும், தொழிற்சங்கம் வேறுபாடுகளை மனதில் கொண்டு ஆளுங்கட்சி தொழிற்சங்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, மற்ற தொழிற்சங்க செயல்பாடுகளை நசுக்குவதை ஒரு பணியாக கொண்டு, ஆளும் கட்சி அல்லாத

தொழிற்சங்க உறுப்பினர்களை நடவடிக்கை என்ற பெயரில் பல்வேறு தொந்தரவுகளை கொடுத்து செயல்பட்டு வருகிறது.

3. சங்க உறுப்பினர் திரு.E.கார்த்திகேயன் ஒண்டிப்புதூர் கிளை-1 ல் ஒட்டுநராக பணிபுரிந்து வருகிறார். இந்த நிலையில் சங்க உறுப்பினர் E.கார்த்திகேயன் மே மாத 2020 மாத சம்பளம் சிலிப்பில் 2 நாட்கள் ஈட்டிய விடுப்பினை அனுமதியின்றி எடுக்கப்பட்டு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது கண்டு அதிர்ச்சி அடைந்தார். மேலும், கொரோனா தொற்று நோய் காரணமாக தமிழக அரசானது தமிழகம் முழுவதும் ஊரடங்கு பிறப்பித்து, பேருந்துகள் எதுவும் இயங்காத நிலையில் பணியாளர்களுக்கு முழுமையான சம்பளம் வழங்க வேண்டும் என்பதையும் மீறி, சங்க உறுப்பினரின் 2 நாட்கள் ஈட்டிய விடுப்பை கழித்து சம்பளம் வழங்கியது சகல சட்ட விதிமுறைகளுக்கு எதிரானதாகும். ஆகவே சங்க உறுப்பினரின் அனுமதியின்றியும், தமிழக அரசு நெறிமுறைகளை மீறியும், ஊரடங்கு காலத்தில் சங்க உறுப்பினரின் 2 நாட்கள் ஈட்டிய விடுப்பை கழித்து சம்பளம் வழங்கியதை ரத்து செய்தும், தமிழக அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்கியதை போல சங்க உறுப்பினருக்கும் சிறப்பு விடுப்பாகக் கருதி சங்க உறுப்பினரிடம் பிடித்தம் செய்த 2 நாட்கள் ஈட்டிய விடுப்பை திரும்ப சங்க உறுப்பினரின் விடுப்பு கணக்கில் சேர்த்து வழங்க வேண்டும்.

4. மனுதாரர் சங்கம் தனது சங்க உறுப்பினரின் நியாயமான கோரிக்கையை வலியுறுத்தி தொழிற்தகராறுகள் சட்டம் பிரிவு 2(கே)ன் கீழ் ஒரு கோரிக்கை மனுவினை தொழிலாளர் அலுவலர் கோவை முன்பாக சமர்ப்பித்தது. அந்த மனு

ந.க.எண்.502/2020 என்ற எண்ணாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையில் கலந்து கொண்ட எதிர்மனுமாரர் சங்க உறுப்பினர் கோரிக்கை குறித்து நேரடியாக பதில் சமர்ப்பிக்காமல் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கூறியிருந்தது. எனவே பிடித்தம் செய்த 2 நாட்கள் ஈட்டிய விடுப்பு நாட்களை திரும்ப சங்க உறுப்பினருக்கு வழங்க வழிவகை இல்லை என தெரிவித்திருந்தார். ஆனால் இது குறித்து எந்த அறிவிப்பும் வழங்கவில்லை. மேலும், விசாரணை போன்ற வாய்ப்புகளும் வழங்கவில்லை. ஆகவே அரசாணைப்படி கோரிக்கை முழுமையாக அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், எதிர்மனுதாரர் இந்த நடவடிக்கையினால் சங்க உறுப்பினரின் சர்வீஸ் காலம் பாதிக்கப்படுவதுடன் பண இழப்பும் ஏற்படுகிறது. எதிர்மனுதாரரின் சட்டவிரோத நடவடிக்கையினை இந்நீதிமன்றத்தின் உத்தரவின் மூலமே தடை செய்ய முடியும் என்பதால் திரு.E.கார்த்திகேயன் ஓட்டுனர் (பணி எண்.C22114) என்பவருக்கு மே 2020 மாத 2 நாட்கள் ஈட்டிய விடுப்பினை சிறப்பு விடுப்பாக கருதி பிடித்தம் செய்த 2 நாட்கள் விடுப்பினை திரும்ப அவரின் விடுப்பு கணக்கில் சேர்த்து வழங்கவேண்டும் என்றும், மேற்படி நாட்களுக்கு சம்பளம் மற்றும் இதர சலுகைகள் வழங்கி உத்தரவு பிறப்பிக்குமாறும் இந்த கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம் :

மனு சட்டபடி நிலைக்கத்தக்கதல்ல. சங்க உறுப்பினர் திரு.E.கார்த்திகேயன், பணி எண்.C22114 என்பவர் ஒண்டிப்புதூர்-1 கிளையில் ஓட்டுனராக பணிபுரிந்து வந்தார். சங்க உறுப்பினர் எதிர்மனுதாரர் நிர்வாகம் கடந்த மே 2020 மாதம் விடுப்பு கணக்கில் இருந்து எடுக்கப்பட்ட 2 நாட்கள் ஈட்டிய

விடுப்பை எதிர்மனுதாரர் நிர்வாகம் திரும்ப வழங்க வேண்டும் என மனு தாக்கல் செய்துள்ளார். கொரானா தொற்றின் காரணமாக ஊரடங்கு இருந்த நிலையில் பேருந்துகள் இயக்கப்படாத காரணத்தினால் பணியாளர்கள் பணிக்கு வராத நிலையிலும் சம்பளம் வழங்கப்பட்டது. ஆனால், கடந்த காலங்களில் பணியாளர்கள் சம்பளம் பெற்ற நாட்கள் மட்டும் கணக்கில் எடுக்கப்பட்டதில், சில பணியாளர்கள் அதிக அளவு விடுப்பு துய்த்தும் மற்றும் விடுப்புகள் இல்லாத காரணத்தினால் சம்பளமில்லா விடுப்பிலும் இருந்துள்ளார்கள். நிர்வாகத்தின் நிதி நிலைமை காரணத்தினாலும் அரசின் நிதிச்சுமை குறைக்கும் நோக்கத்தோடு பணியாளர்களின் ஒரு வருட வருகைப்பதிவின் சராசரியை கணக்கிட்டு, இந்த வகை தொழிலாளர்களுக்கு மட்டும் ஊதியமில்லாத நாட்களையும், பணிக்கு வராத நாட்களையும் கணக்கில் கொண்டு முழுமையாக சம்பளம் பெற்ற நாட்களை மட்டும் சராசரியாக எடுத்து முழுமையாக சம்பளம் வழங்கப்பட்டது.

6. மேலும், அவ்வாறான பணியாளர்களை வரிசைப்படுத்துகையில் மேற்கண்ட பணியாளர் கடந்த காலங்களில் ஒரு மாதத்தில் சராசரியாக 28 நாட்கள் மட்டுமே பணிபுரிந்துள்ளார். எனவேதான் இவருக்கு 30 நாட்களுக்கும் சம்பளம் வழங்க வேண்டுமென்ற நோக்கில் 02 நாட்கள் ஈட்டிய விடுப்பு சரிசெய்து 28 நாட்களுக்கு "H" எனவும் வருகைப்பதிவு பெறப்பட்டதைத் தொடர்ந்து இவருக்கு ஊதிய இழப்பு இல்லாமல் அந்த மாதத்தில் முழுச்சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கொரானா பாதிப்பு ஏற்பட்ட சூழ்நிலையில் பேருந்துகள் முழுவதும் தடை செய்யப்பட்ட நிலையில், வருமானமே இல்லாத நிலையில் சங்க உறுப்பினருக்கு ஊதிய இழப்பு ஏற்படுத்த கூடாது என்ற நிலையில் சங்க உறுப்பினருக்கு நிர்வாகம்

ஊதிய இழப்பு ஏற்படுத்தவில்லை. மேலும், எதிர்மனுதாரர் நிர்வாகம் ஒரு பொது சேவை நிறுவனம் ஆகும். இதில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் ஒரே மாதிரியான நிலைபாடு கொண்டு வேறுபாடு இல்லாமல் சம்பளம் பிரதி மாதம் வழங்கி உள்ளது. மேலும் சங்க உறுப்பினருக்கு கடந்த 21.04.2020 முதல் 20.05.2020 வரை பேருந்துகள் முழுவதும் இயங்காத சூழ்நிலையில் கடந்த காலங்களில் சராசரியாக 28 நாட்கள் மட்டுமே வருகை பதிவு உள்ளதால் நிலுவையிலுள்ள விடுப்பினை கழித்து சம்பந்தப்பட்ட மாதத்தில் முழு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. எனவே பிடித்தம் செய்த 02 ஈட்டிய விடுப்பு நாட்களை திரும்ப சங்க உறுப்பினருக்கு வழங்க வழிவகை இல்லை. மேலும் மனுதாரர் சங்கம் கூறுவது போல எதிர்மனுதாரர்கள் சங்க உறுப்பினருக்கு எதிராக சட்ட விதிகளுக்கு புறம்பாகவோ, கழக நிலையாணைகளுக்கு புறம்பாகவோ, வேண்டுமென்றே பழிவாங்கும் நோக்கத்தோடோ, செயல்படவில்லை. எனவே மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.

7. தீர்வு காண வேண்டிய பிரச்சனை :

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கோவை கோட்டம்) கோயம்புத்தூர் என்ற நிர்வாகத்தில் பணிபுரியும் திரு.E.கார்த்திகேயன், ஓட்டுநருக்கு (பணி எண்.சி22114) மே 2020 ம் மாதம் விடுப்பு கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட 2 நாட்கள் ஈட்டிய விடுப்பினை, சிறப்பு விடுப்பாக கருதி, பிடித்தம் செய்த 2 நாட்கள் ஈட்டிய விடுப்பினை திரும்ப அவரின் விடுப்பு கணக்கில் சேர்த்து வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? இல்லையா?

8. சான்றாவணமும், சாட்சியமும் :

மனுதாரர் தரப்பில் மனுதாரர் திரு.E.கார்த்திகேயன் தொ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, தொ.சா.ஆ.1 முதல் தொ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை, மற்றும் சான்றாவணம் குறியீ டு செய்யப்படவில்லை.

9. தீர்வு :

மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், தொழிற்சங்க உறுப்பினர் திரு.E.கார்த்திகேயன், எதிர்மனுதாரர்கள் நிர்வாகத்தின் ஓட்டுநராக பணி செய்து வருகிறார் என்றும், கொரானா தொற்று நோய் காரணமாக தமிழக அரசானது தமிழகம் முழுவதும் ஊரடங்கு பிறப்பித்து பேருந்துகள் எதுவும் இயங்காத நிலையில் பணியாளர்களுக்கு முழுமையான சம்பளம் வழங்கவேண்டும் என்பதையும் மீறி, சங்க உறுப்பினரின் மே 2020 சங்க உறுப்பினரின் மாத சம்பளத்தில் 2 நாள் ஈட்டிய விடுப்பு கழிக்கப்பட்டது சட்டத்திற்கு புறம்பானது என்றும், சங்க உறுப்பினரின் அனுமதியோ, முன்னறிவிப்போ இன்றி அரசு போக்குவரத்து கழகத்தின் முறையான சுற்றறிக்கை எதுவும் இன்றி பிடித்தம் செய்த 2 நாள் ஈட்டிய விடுப்பினை சிறப்பு விடுப்பாக கருதி, பிடித்தம் செய்த 2 நாட்கள் ஈட்டிய விடுப்பினை திரும்ப சங்க ஊறுப்பினரின் ஈட்டிய விடுப்பு கணக்கில் சேர்த்து வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

10. எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், கொரானா தொற்றின் காரணமாக ஊரடங்கு இருந்த நிலையில் பேருந்துகள் இயக்கப்படாத

காரணத்தினால் பணியாளர்கள் பணிக்கு வராத நிலையிலும் சம்பளம் வழங்கப்பட்டது எனவும், ஆனால், கடந்த காலங்களில் பணியாளர்கள் சம்பளம் பெற்ற நாட்கள் மட்டும் கணக்கில் எடுக்கப்பட்டதில், சில பணியாளர்கள் அதிக அளவு விடுப்பு துய்த்தும் மற்றும் விடுப்புகள் இல்லாத காரணத்தினால் சம்பளமில்லா விடுப்பிலும் இருந்துள்ளார் எனவும், நிர்வாகத்தின் நிதி நிலைமை காரணத்தினாலும் அரசின் நிதிச்சுமை குறைக்கும் நோக்கத்தோடு பணியாளர்களின் ஒரு வருட வருகைப்பதிவின் சராசரியை கணக்கிட்டு, இந்த வகை தொழிலாளர்களுக்கு மட்டும் ஊதியமில்லாத நாட்களையும், பணிக்கு வராத நாட்களையும் கணக்கில் கொண்டு முழுமையாக சம்பளம் பெற்ற நாட்களை மட்டும் சராசரியாக எடுத்து முழுமையாக சம்பளம் வழங்கப்பட்டது என்றும், சங்க உறுப்பினருக்கு கடந்த 21.04.2020 முதல் 20.05.2020 வரை பேருந்துகள் முழுவதும் இயங்காத சூழ்நிலையில் கடந்த காலங்களில் சராசரியாக 28 நாட்கள் மட்டுமே வருகை பதிவு உள்ளதால் நிலுவையிலுள்ள விடுப்பினை கழித்து சம்பந்தப்பட்ட மாதத்தில் முழு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது எனவும், சங்க உறுப்பினர் பணிக்கு அழைத்தும் வராததாலும், பிடித்தம் செய்த 02 ஈட்டிய விடுப்பு நாட்களை திரும்ப சங்க உறுப்பினருக்கு வழங்க வழிவகை இல்லை என வாதிட்டு மனுவை தள்ளுபடி செய்ய வேண்டிக் கொண்டார்.

11. சங்க உறுப்பினர் கோரிக்கை என்னவென்றால் 2 நாட்கள் ஈட்டிய விடுப்பை எதிர்மனுதாரர் பிடித்தம் செய்ததை திரும்ப அவரின் விடுப்பு கணக்கில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதாகும். எதிர்மனுதாரர் தரப்பு கோரிக்கை என்னவென்றால் கொரானா காலத்திற்கு உட்பட்ட காலமான 21.04.2020 முதல்

20.05.2020 வரை பேருந்துகள் முழுமையாக இயங்கவில்லை எனவும், அந்த காலங்களில் சராசரியாக 28 நாட்களுக்கு மட்டுமே வருகைபதிவு இருந்ததாலும், நிர்வாகத்தின் நிதிநிலமை காரணத்தினாலும், அரசின் நிதிச்சுமையை குறைக்கும் பொருட்டு சங்க உறுப்பினரின் ஈட்டிய விடுப்பில் உள்ள 2 நாட்கள் கழிக்கப்பட்டது என்பதும், சங்க உறுப்பினரை பணிக்கு அழைத்தும் ஆஜராகவில்லை என்பதும் ஆகும். அரசின் நிதிச்சுமையை குறைக்கும் பொருட்டு சங்க உறுப்பினரின் இருப்பில் உள்ள 2 நாட்கள் ஈட்டிய விடுப்பை மே மாதம் 2020 காலக்கட்டத்தில் கழிப்பதற்கு நிர்வாகம் தொழிற்சங்கங்களின் ஒப்புதலுடனோ அல்லது மனுதாரரின் ஒப்புதலுடனோ 2 நாட்கள் விடுப்பை கழித்துக் கொண்டதாக கிடையாது. இது சம்பந்தமாக சங்க உறுப்பினருக்கு எந்த அறிவிப்பும் கொடுக்கப்படவில்லை. எதிர்மனுதாரர் நிர்வாகம் சங்க உறுப்பினரின் 2 நாட்கள் ஈட்டிய விடுப்பை தன்னிச்சையாக பிடித்தம் செய்துள்ளது சட்டத்திற்கு புறம்பானதாகும். மேலும், குறுக்கு விசாரணையின் போது சங்க உறுப்பினர் பணிக்கு அழைத்தும் அவர் பணிக்கு வர மறுத்துவிட்டார் என்பதாக வினா எழுப்பப்பட்டுள்ளது. சங்க உறுப்பினர் அதை மறுத்துள்ளார். எதிருரையில் எதிர்மனுதாரர் சங்க உறுப்பினரை பணிக்கு அழைத்தும் அவர் மறுத்துவிட்டார் என்பதாக அவர் கூற வில்லை. எனவே எதிர்மனுதாரரின் இந்த கூற்று ஏற்றுக் கொள்ள இயலாது. எனவே, எதிர்மனுதாரர் உரிய அறிவிப்பு இன்றியும் சங்க உறுப்பினரின் ஒப்புதல் இன்றியும் தன்னிச்சையாக சங்க உறுப்பினரின் கணக்கிலிருந்த 2 நாட்கள் ஈட்டிய விடுப்பை பிடித்தம் செய்தது சட்டத்திற்கு புறம்பானது என்பதாக முடிவு செய்யப்படுகிறது.

12. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் 2 நாட்கள் ஈட்டிய விடுப்பை பிடித்தம் செய்தது சம்பந்தமாக சங்க உறுப்பினர் எதிர்மனுதாரரிடம் எந்த கோரிக்கையும் முன்னிலை செய்யவில்லை எனவும், எவ்வித கோரிக்கை கடிதமும் எதிர்மனுதாரருக்கு அனுப்பாமலும் நேரடியாக தாவா எழுப்பியது நிலைக்கத்தக்கதல்ல என்பதாக தெரிவிக்கப்பட்டது. சங்க உறுப்பினர் தரப்பில் எதிர்மனுதாரரிடம் 05.07.2020 ம் தேதியில் ஒரு கோரிக்கை மனு தொ.சா.ஆ.3 அனுப்பட்டது என்பதாக தெரிவிக்கப்பட்டது. தொ.சா.ஆ.3 ஐ சங்க உறுப்பினர் எதிர்மனுதாரருக்கு அனுப்பியதற்கு எவ்வித சான்றும் தாக்கல் செய்யவில்லை. சங்க உறுப்பினர் தொ.சா.ஆ.1 ஐ தன்னுடைய குறுக்கு விசாரணையின் போது தான் தனது கோரிக்கை சம்பந்தமாக எழுத்துமூலமாக எதிர்மனுதாரரிடம் கேட்கவில்லை என்பதாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே தொ.சா.ஆ.3 வழக்கிற்காக பின்னால் சங்க உறுப்பினரால் தயாரிக்கப்பட்டது என்பதாக தீர்மானிக்கிறேன். எவ்வாறாயினும் எதிர்மனுதாரர் சங்கஉறுப்பினரின் ஈட்டிய விடுப்பில் 2 நாட்கள் தன்னிச்சையாக பிடித்தம் செய்தது சட்டத்திற்கும் மற்றும் இயற்கை நியதிக்கும் புறம்பானது என முடிவு செய்கிறேன்.

13. எனவே மேலே குறிப்பிட்டுள்ள காரணங்களினால் எதிர்மனுதாரர் சங்க உறுப்பினரின் ஈட்டிய விடுப்பிலிருந்து 2 நாட்கள் பிடித்தம் செய்தது சட்டத்திற்கு புறம்பானது என முடிவு செய்து, மனுதாரரின் கோரிக்கை நியாயமானது என தீர்வு செய்து பிரச்சனைக்கு இவ்வாறாக விடையளிக்கிறேன்.

முடிவில், தமிழக அரசாணை (டி) எண்.350 – தொழிலாளர் மற்று வேலைவாப்பு (டி1) துறை நாள். 13.06.2024ன் கீழ் எழுப்பபப்பட்ட எழுவினாவிற்கு கீழ்கண்டவாறு பதில் அளிக்கப்படுகிறது.

1. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கோவை கோட்டம்) கோயம்புத்தூர் என்ற நிர்வாகத்தில் பணிபுரியும் திரு.E.கார்த்திகேயன், ஓட்டுநருக்கு (ப.எண்.C22114) மே 2020ம் மாதம் விடுப்பு கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட 2 நாட்கள் ஈட்டிய விடுப்பினை சிறப்பு விடுப்பாக கருதி, பிடித்தம் செய்த 2 நாட்கள் ஈட்டிய விடுப்பினை திரும்ப அவரின் விடுப்பு கணக்கில் சேர்த்து வழங்க வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தான் என்றும்,

2. மனுதாரர் திரு.E.கார்த்திகேயன், ஒட்டுநருக்கு பிடித்தம் செய்த 2 நாட்கள் ஈட்டிய விடுப்பை சிறப்பு விடுப்பாக கருதி, அந்த 2 நாட்கள் விடுப்பினை மீண்டும் அவரின் விடுப்பு கணக்கில் சேர்க்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

3. வழக்கின் தன்மையைக் கருத்தில் கொண்டு செலவுத் தொகையை குறித்து உத்தரவு எதுவும் இல்லை.

(இந்த தீர்வம் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் வருடம் மார்ச் மாதம் 17ம் நாள் என்னால் நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.)

LATHA A P

Ex W11 marked by WW1 Chief
Digitally signed by LATHA A P
Date: 2026.03.17 17:22:04 +0530

தலைமை தாங்கும் அதிகாரி,
முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>** :

தொ.சா.1 - திரு.E.கார்த்திகேயன்

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>** :

- இல்லை -

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> :

| ஆவண எண் | தேதி | விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| தொ.சா.ஆ.1 | 04.01.2022 | ந.க.எண்.5026/2020 ன் சமரச முறிவறிக்கை. | அசல் |
| தொ.சா.ஆ.2 | 28.08.2020 | மனுதாரர் சங்கம் கோவை தொழிலாளர் அலுவலர் முன்பாக தாக்கல் செய்த 2(k) மனு ந.க.எண்.502/2020.<br><br>மனுதாரர் சங்கம் தொழிற்சங்கத்தின் உறுப்பினர்களின் கோரிக்கை கறித்த தீர்மான நோட். | நகல் |
| தொ.சா.ஆ.3 | 05.07.2020 | மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு அனுப்பிய கடிதம். | நகல் |
| தொ.சா.ஆ.4 | --- | மனுதாரர் சங்க உறுப்பினர் கார்த்திகேயனின் அடையாள அட்டை. | நகல் |
| தொ.சா.ஆ.5 | --- | சந்தா ரசீது. | நகல் |
| தொ.சா.ஆ.6 | 20.08.2020 | மனுதாரர் சங்கத்தின் பொதுக்குழு கூட்ட அறிக்கை. | நகல் |

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> :

- இல்லை -

LATHA A P

Ex W11 marked by WW1 Chief
Digitally signed by LATHA A P
Date: 2026.03.17 17:22:13 +0530

தலைமை தாங்கும் அதிகாரி,
முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

Copy of Fair/Draft Order in ID No.54/2025, Date : 17.03.2026. PLC, CBE.